# ஆன்மிக சிந்தனை

வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்குக் காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும், திருட்டும், ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மைவிட்டு அகலவில்லை.

–சுவாமி விவேகானந்தர்

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

–ஏசாயா 58:8

தூதர்களே! தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நல்லறம் செய்யுங்கள்! நீங்கள் செய்வதை நான் அறிந்தவன். உங்களின் இந்தச் சமுதாயம் ஒரே சமுதாயமே. நான் உங்கள் இறைவன். எனக்கே அஞ்சுங்கள்!

–திருக்குர்ஆன் 23: 51, 52

## இன்றும் நாளையும்

**செவ்வாய்க்கிழமை**
(20–04–2021)
**பிலவ ஆண்டு, சித்திரை – 07**
*பிறை:* வளர்பிறை

**திதி** : அஷ்டமி இரவு 08.09 வரை பிறகு நவமி.
**நட்சத்திரம்** : பூசம் பின்னிரவு 03.39 வரை பிறகு ஆயில்யம்.
**யோகம்** : சித்த யோகம்.
**ராகுகாலம்** : பிற்பகல் 3.00 – 4.30 மணி.
**எமகண்டம்** : காலை 9.00 – 10.30 மணி.
**சூலம்** : வடக்கு.
**நல்ல நேரம்** : காலை 8 – 9 மணி. மாலை 5 – 6 மணி.

**இன்றைய விசேஷம்:** சுவாமிமலை ஸ்ரீ முருகப் பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப் பூமாலை சூடியருளல். மதுரை ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை. வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் உற்சவாரம்பம். சமயபுரம், உதகை திருத்தலங்களில் ஸ்ரீ மாரியம்மன் ரதோற்சவம். சீர்காழி ஸ்ரீ சிவபெருமான் வெள்ளி ரதத்தில் பவனி. ஆறுமுகமங்கலம் ஸ்ரீ ஆயிரத்தொன்று விநாயகர் மூஷிக வாகனத்தில் பவனி.

| | |
|---|---|
| மேஷம் | மாற்றம் |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | நன்மை |
| கடகம் | சுகம் |
| சிம்மம் | சுபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | பெருமை |
| விருச்சிகம் | வெற்றி |
| தனுசு | போட்டி |
| மகரம் | கவனம் |
| கும்பம் | சிறப்பு |
| மீனம் | ஆக்கம் |

**புதன்கிழமை**
(21–04–2021)
**பிலவ ஆண்டு, சித்திரை – 08**
*பிறை:* வளர்பிறை

**திதி** : நவமி இரவு 07.52 வரை பிறகு தசமி.
**நட்சத்திரம்** : ஆயில்யம் பின்னிரவு 3.53 வரை பிறகு மகம்.
**யோகம்** : சித்த யோகம்.
**ராகுகாலம்** : நண்பகல் 12.00 – 1.30 மணி.
**எமகண்டம்** : காலை 7.30 – 9.00 மணி.
**சூலம்** : வடக்கு.
**நல்ல நேரம்** : காலை 6 – 7 மணி. மாலை 4 – 5 மணி.

**இன்றைய விசேஷம்:** ஸ்ரீ ராமநவமி. மதுராந்தகம் ஏரி காத்த ஸ்ரீ கோதண்டராம சுவாமி சிறப்பு திருமஞ்சனம், அலங்கார சேவை. பத்ராசலம் ஸ்ரீ ராமபிரான் சிறப்பு அபிஷேகம், அலங்காரம். மதுரை ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் நந்தீஸ்வர யாளி வாகனத்தில் பவனி. திருவையாறு ஸ்ரீ சிவபெருமான் தன்னைத் தானே பூஜித்தல், விருஷப வாகனத்தில் பவனி. திருஉத்தரகோசமங்கை ஸ்ரீ மங்களேஸ்வரி விமானத்தில் பவனி. சிவஞான சுவாமி குருபூஜை.

| | |
|---|---|
| மேஷம் | ஆற்றல் |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | இன்பம் |
| கடகம் | தனம் |
| சிம்மம் | சுகவீனம் |
| கன்னி | நிறைவு |
| துலாம் | போட்டி |
| விருச்சிகம் | பொறுமை |
| தனுசு | பொறுப்பு |
| மகரம் | சாதனை |
| கும்பம் | ஆதரவு |
| மீனம் | ஜெயம் |

## தொலைக்காட்சிகளில் இன்றைய சினிமா



**ஜெயா மூவி**
**பிற்பகல் 1**
படம் : **ஜானகிராமன்**
நடிப்பு : சரத்குமார், நக்மா
**இரவு 7**
படம் : **டார்லிங் 2**
நடிப்பு : கலையரசன், மாயா
**இரவு 9.30**
படம் : **மணியோசை**
நடிப்பு : கல்யாண் குமார், குமாரி ருக்கு

**ஜெயா டிவி**
**காலை 10**
படம் : **நீதானே என் பொன் வசந்தம்**
நடிப்பு : ஜீவா, சமந்தா
**பிற்பகல் 1.30**
படம் : **உத்தம ராசா**
நடிப்பு : பிரபு, குஷ்பு
**இரவு 9.30**
படம் : **ஜீ**
நடிப்பு : அஜித், திரிஷா

**கலைஞர் டிவி**
**பிற்பகல் 1.30**
படம் : **பூ**
நடிப்பு : ஸ்ரீகாந்த், பார்வதி
**இரவு 9.30**
படம் : **நாயகி**
நடிப்பு : ஜெயபிரகாஷ், திரிஷா

**விஜய் சூப்பர்**
**காலை 8**
படம் : **அண்ணனுக்கு ஜே**
நடிப்பு : தினேஷ், மகிமா
**பிற்பகல் 1.30**
படம் : **மாரி 2**
நடிப்பு : தனுஷ், சாய் பல்லவி
**பிற்பகல் 3.45**
படம் : **ஈரம்**
நடிப்பு : ஆதி, சிந்து மேனன்

**ஆன்மிக நிகழ்ச்சிகள்**

**தூர்தர்ஷன்**
**காலை 9 :** ராமாயணம் தொடர்

**சன் டிவி**
**காலை 6 :** ஆலய வழிபாடு
**காலை 6.30 :** ஆன்மிக கதைகள்

**வேந்தர் டிவி**
**காலை 6 :** உள்ளம் உருகுதய்யா

**விஜய் சூப்பர்**
**காலை 6 :** ராதா கிருஷ்ணா தொடர்

**ஜெயா டிவி**
**காலை 6 :** அருள் நேரம்
**காலை 8 :** ஆலய அற்புதங்கள்

**ராஜ் டிஜிட்டல் ப்ளஸ்**
**காலை 6.30 :** ஆலய தரிசனம்

**பொதிகை டிவி**
**காலை 6 :** ஆலய தரிசனம்

# மாவட்டத்தில் 13,572 பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளனர்

## தேர்தல் அதிகாரி தகவல்

**கோவை, ஏப். 19:** சட்டப்பேரவை தேர்தலில் கோவை மாவட்டத்தில் இதுவரை 13 ஆயிரத்து 572 பேர் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி எஸ்.நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கோவை மாவட்டத்தில் சட்டப் பேரவை தேர்தலின் போது தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அரசு அலுவலர்கள் 19 ஆயிரத்து 29 பேருக்கு தபால் வாக்கு செலுத்துவதற்கான வாக்குச் சீட்டுகள் அளிக்கப்பட்டிருந்தன. இதில் இதுவரையில் மேட்டுப்பாளையம் – 1,598, சூலூர் – 1,274, கவுண்டம்பாளையம் – 2001, கோவை (வடக்கு) – 1,451, தொண்டாமுத்தூர் – 1,150, கோவை (தெற்கு) – 1,465, சிங்காநல்லூர் – 1,679, கிணத்துக்கடவு – 1,293, பொள்ளாச்சி – 929, வால்பாறை – 566 என 10 சட்டப் பேரவை தொகுதிகளிலும் மொத்தம் 13 ஆயிரத்து 406 பேர் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

இதுதவிர ராணுவ வீரர்கள், பணியாளர்கள் 166 பேர் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தமாக இதுவரை 13 ஆயிரத்து 572 பேர் தபால் வாக்குகளை செலுத்தியுள்ளனர்.

சட்டப் பேரவை தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 2 ஆம் தேதி காலை 8 மணிக்குள் பெறப்படும் வாக்குகள் மட்டுமே எண்ணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே இதுவரை தபால் வாக்கு செலுத்தாதவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தபால் வாக்குகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஷா சார்பில் கைதிகளுக்கு யோகா பயிற்சி



ஈஷா அறக்கட்டளை சார்பில் இணையவழியில் நடைபெறும் யோகா பயிற்சி வகுப்புகளில் பங்கேற்றுள்ள பெண் கைதிகள்.

**கோவை, ஏப். 19:** தமிழக சிறைகளில் உள்ள கைதிகளுக்கு ஈஷா அறக்கட்டளை சார்பில் 10 நாள் இணையவழி யோகா பயிற்சி திங்கள்கிழமை (ஏப்ரல் 19) முதல் நடத்தப்படுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் இந்த யோகா பயிற்சி சென்னை, செங்கல்பட்டு, வேலூர், திருச்சி, கோவை, சேலம், மதுரை, கடலூர், பாளையங்கோட்டை உள்ளிட்ட இடங்களில் உள்ள 18 சிறைகளில் இருக்கும் ஆண், பெண் கைதிகளுக்கு அளிக்கப்படுகிறது.

தொடர்ந்து 10 நாள்களுக்கு நடைபெறும் இந்தப் பயிற்சியில், சத்குரு ஜக்கி வாசுதேவிடம் பயிற்சி பெற்ற யோகா ஆசிரியர்கள் பங்கேற்று பயிற்சி அளிக்கின்றனர். இதில், சிம்ம க்ரியா, உப யோகா, நமஸ்கார் யோகா உள்ளிட்ட எளிமையான அதேநேரம், சக்தி வாய்ந்த பயற்சிகள் கற்றுக்கொடுக்கப்படும். இந்த யோகா பயிற்சிகளை செய்வதன் மூலம் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியும், நுரையீரல் திறனும் அதிகரிக்கும். மனதளவில் சமநிலை உருவாகும். உடல் ஆரோக்கியமும் மேம்படும். சிறைக் கைதிகளின் நலனுக்காக ஆண்டுதோறும் இது போன்ற இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாக ஈஷா அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

# அன்னூரில் மாவட்ட சுகாதார பணிகளின் துணை இயக்குநர் ஆய்வு

**அன்னூர், ஏப். 19:** அன்னூர் பேரூராட்சிக்கு உள்பட்ட ராம் நகரில் மாவட்ட சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

அன்னூர் பேரூராட்சிக்கு உள்பட்ட ராம் நகரில் 3 பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதைத் தொடர்ந்து சுகாதாரத் துறை சார்பில் அப்பகுதியில் கிருமி நாசினி தெளித்தல், அருகில் இருப்பவர்களுக்கு பரிசோதனை செய்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்றன. இந்நிலையில் அன்னூர் வந்த மாவட்ட சுகாதாரப் பணிகளின் துணை இயக்குநர்

ரமேஷ்குமார் ராம் நகரில் இந்தப் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர், பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் வசிக்கும் 45 வயதுக்கும் மேற்பட்டவர்கள் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் செல்வபதி, சிவசங்கரி மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கரோனா: ராணுவ ஆள் சேர்ப்புக்கான பொது நுழைவுத் தேர்வு ஒத்திவைப்பு

**கோவை, ஏப். 19:** கரோனா தொற்று பரவல் காரணமாக, கோவையில் நடைபெறவிருந்த ராணுவ ஆள் சேர்ப்புக்கான பொது நுழைவுத் தேர்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ராணுவ ஆள் சேர்ப்பு மைய இயக்குநர் கர்னல் ஆர்.எஸ்.ராவத் வெளியிட்ட செய்தி:

ராணுவ வீரர் (தொழில்நுட்பம்), உதவி செவிலியர், எழுத்தர், பண்டகக் காப்பாளர் உள்ளிட்ட பணிகளுக்கான ஆள்சேர்ப்பு கோவையில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இதில் நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், மதுரை, தேனி, திருப்பூர், கோவை ஆகிய 11 மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பங்கேற்றனர். இவர்களுக்கான பொது நுழைவுத் தேர்வு ஏப்ரல் 25ஆம் தேதி கோவை நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கரோனா தொற்று வேகமாகப் பரவி வரும் காரணத்தால் இந்த பொது நுழைவுத் தேர்வு காலவரையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

இதை முன்னிட்டு வழங்கப்பட்ட தேர்வு நுழைவுச் சீட்டுகள் ரத்து செய்யப்படுகின்றன. பொது நுழைவுத்தேர்வுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும். தேர்வுத் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட மையங்களில் இருந்து தேர்வு நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலும் அறிவிப்புகளை WWW.JOININDIANARMY.NIC.IN என்ற அதிகாரபூர்வ இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

# சிறுவனின் காதில் சிக்கிய பிளாஸ்டிக் குண்டு: அறுவை சிகிச்சையின்றி அகற்றம்

**கோவை, ஏப். 19:** சிறுவனின் காதில் சிக்கிக் கொண்ட பிளாஸ்டிக் குண்டு கோவை அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின்றி வெளியே எடுக்கப்பட்டது.

கோவை, ராமநாதபுரம் காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு காவலராகப் பணியாற்றுபவர் கலைச்செல்வி. இவரது மகன் கிஷோர் (12). 7ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவர் வீட்டில் பொம்மை துப்பாக்கியால் திங்கள்கிழமை விளையாடிக்கொண்டிருந்தபோது அதிலிருந்த பிளாஸ்டிக் குண்டு சிறுவனின் காதில் சிக்கிக்கொண்டது.

இதைத் தொடர்ந்து சிறுவனை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு காதில் இருந்து பிளாஸ்டிக் குண்டை எடுக்க முடியாததால் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தனர். அரசு மருத்துவமனையில் அப்போது பணியில் இருந்த உதவி இருப்பிட மருத்துவ அலுவலர் மணிகண்டன், முதுநிலை 2 ஆம் ஆண்டு மருத்துவ மாணவி நித்யா ஆகியோர் சிறுவனின் காதில் தண்ணீரை அடித்து பிளாஸ்டிக் குண்டை அறுவை சிகிச்சையின்றி வெளியே எடுத்தனர்.

## கல்லீரல் தினம்

# விஜிஎம் மருத்துவமனையில் அதிநவீன கருவி அறிமுகம்



கல்லீரல் குறைபாடுகளைக் கண்டறியும் அதிநவீன கருவியை அறிமுகம் செய்து வைத்த அவினாசிலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.பி.தியாகராஜன். உடன், மருத்துவமனை தலைவர் மருத்துவர் வி.ஜி.பிரசாத் உள்ளிட்டோர்.

**கோவை, ஏப். 19:** உலக கல்லீரல் தினத்தை முன்னிட்டு கோவை விஜிஎம் மருத்துவமனையில் ஃபைபிரோஸ்கேன் 430 மினி பிளஸ் ஸ்மார்ட் எக்ஸாம் அண்ட் ஃபாட்கேப் என்ற அதிநவீன கருவி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருவி அறிமுக நிகழ்ச்சியில் அவினாசிலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.பி.தியாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு துவக்கிவைத்தார். இது குறித்து விஜிஎம் மருத்துவமனை தலைவர் மருத்துவர் வி.ஜி.பிரசாத் கூறியதாவது:

கிருமிகளை அழித்தல், உட்கொள்ளும் நச்சுக்களை களைதல், ரத்த விருத்தி போன்ற 5 ஆயிரம் வேலைகளை செய்யும் உடலின் மிகப்பெரிய உறுப்பு கல்லீரல் ஆகும். கல்லீரல் ஆரோக்கியமாக உள்ளதா என்பதைக் கண்டறிய அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் ரத்தப் பரிசோதனை முதற்கட்டமாக செய்கிறோம். இவற்றை மேலும் பரிசோதனை செய்ய ஃபைபிரோஸ்கேன் 430 மினி பிளஸ் ஸ்மார்ட் எக்ஸாம் அண்ட் ஃபாட்கேப் என்ற அதிநவீன கருவியை அறிமுகம் செய்துள்ளோம். இது பிரான்ஸ் நாட்டில் உள்ள எக்கோ சென்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவர்கள் மதுரா பிரசாத் சுமன், மித்ரா பிரசாத், வம்சி மூர்த்தி, சங்கமேஷ்வரன், சுமன், சுனில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு: வால்பாறைக்கு தளர்வு அளிக்க வியாபாரிகள் கோரிக்கை

**வால்பாறை, ஏப். 19:** வால்பாறை பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கில் இருந்து தளர்வு அளிக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வால்பாறை வட்ட வியாபாரிகள் கூட்டமைப்பின் தலைவர் ஜெபராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வால்பாறை நகரம் சுற்றுலாத் தொழிலையே நம்பியே உள்ளது. இதேபோல இப்பகுதியில் உள்ள வியாபாரிகள் எஸ்டேட் தொழிலாளர்களையே நம்பி உள்ளனர். கடந்த ஆண்டு பொதுமுடக்கத்தால் இப்பகுதி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பல வியாபாரிகள் வால்பாறையை விட்டே சென்றுவிட்டனர்.

இந்நிலையில் தற்போது சுற்றுலாத் தலங்களுக்கு தடை விதித்திருப்பதோடு ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எஸ்டேட் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டுமே விடுமுறை என்பதால் அன்றையை தினம் மட்டும் வால்பாறைக்கு வந்து பொருள்கள் வாங்கி செல்வார்கள். இவர்களின் வருகையை நம்பியே வியாபாரிகள் உள்ளனர். தற்போது ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கால் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதோடு வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

எனவே, வால்பாறை போன்ற மலைப் பகுதிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கில் தளர்வு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமை செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளோம் என்றார். இந்தப் பேட்டியின் போது, கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஷாஜி ஜார்ஜ், பொருளாளர் ஜேசுதாசன் உள்ளிட்ட கூட்டமைப்பு நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# முதியவர் கொலை வழக்கில் தேடப்பட்டவர் கைது

**மதுக்கரை, ஏப். 19:** வாளையாறு அருகே முதியவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தேடப்பட்டவரை தனிப்படை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

கோவை, பிச்சனூர் டேம் தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் கருப்புசாமி (77). வாளையாறு அருகே உள்ள தோட்டத்தில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் இவரது சடலம் கடந்த ஏப்ரல் 3 ஆம் தேதி போலீஸாரால் மீட்கப்பட்டது. இது தொடர்பாக க.க. சாவடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். எந்த தடயங்களும் கிடைக்காத நிலையில் ஆய்வாளர் முருகேஷ் தலைமையில் தனிப்படை அமைத்து போலீசார் விசாரணையை துரிதப்படுத்தினர்.

விசாரணையில், தனது சகோதரர் ராமகிருஷ்ணன் தோட்டத்தின் அருகே

மாடு மேய்க்க சென்ற கருப்புசாமிக்கும், அருகே உள்ள தோட்டத்தில் மாடு மேய்க்க வந்த வரதராஜன் என்பவருக்கும் ஏற்பட்ட தகராறில் வரதராஜன், கருப்புசாமியை வெட்டிக் கொலை செய்தது தெரியவந்தது. மேலும் வரதராஜன் வீட்டில் இருந்த அரிவாள் மற்றும் அவர் சட்டையில் இருந்த ரத்த கறை தடயங்களை வைத்து, அதை பரிசோதனை செய்த தடயவியல் துறையினர் கொலை செய்தது வரதராஜன் என்பதை உறுதி செய்தனர். இதையடுத்து போலீஸார் வரதராஜனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவிநாசி கிளைச் சிறையில் அடைத்தனர்.

# வேளாண்மை துறை மாணவர்கள் களப் பயிற்சி

**மேட்டுப்பாளையம், ஏப். 19:** தக்காளி சாகுபடி குறித்து மேட்டுப்பாளையத்தில் வேளாண்மை துறை மாணவர்கள், விவசாயிகளுடன் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஈரோடு குமரகுரு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்தின் கீழ் மேட்டுப்பாளையம் அருகிலுள்ள புஜங்கனூரில் தங்கி விவசாயிகளின் தோட்டங்களுக்கு சென்று களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதில் வாழை, தென்னை, கரும்பு, காய்கறிகள் குறித்து கள பயிற்சி எடுத்து வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக புஜங்கனூரிலுள்ள விவசாயி ஒருவரின் தோட்டத்தில் வேளாண்மை துறை மாணவர்கள் தக்காளி பயிர் செய்வதற்காக பணிகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள், மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

## பொறியியல் பருவத் தேர்வு

# புத்தகம், இணையத்தைப் பயன்படுத்த அண்ணா பல்கலை. அனுமதி

**சென்னை, ஏப். 19:** பொறியியல் பருவத் தேர்வின்போது, தேர்வர்கள் புத்தகத்தைப் பார்த்தும், இணையத்தைப் பயன்படுத்தியும் விடையளிக்க அண்ணா பல்கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து கல்லூரிகளுக்கு அண்ணா பல்கலைக்கழகம் அனுப்பிய சுற்றறிக்கை: நிகழும் கல்வியாண்டில் ஏப்ரல், மே மாதத்துக்கான பருவத் (செமஸ்டர்) தேர்வுகள் இணையவழியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, பருவத் தேர்வுகள் புத்தகத்தைப் பார்த்து விடை எழுதும் வகையில் நடத்தப்படும். இருந்த போதிலும் கேள்விக்கான விடைகள் நேரடியாகப் புத்தகத்தில் இருக்காது. விடைகளைப் பாடத்திட்டத்திலும், இணையதளத்தில் ஆராய்ந்து எழுதும் வகையில் கேள்விகள் கேட்கப்படும்.

அவ்வாறு கேட்கப்படும், 5 கேள்விகளுக்கு தலா 2 மதிப்பெண்கள், 5 கேள்விகளுக்கு தலா 8 மதிப்பெண்கள் என மொத்தம் 50 மதிப்பெண்களுக்குத் தேர்வு நடைபெறும். அதேபோல, தேர்வின்போது பிற மாணவர்களிடம் இருந்து கேள்விக்கான விடைகள் பெறப்பட்டிருந்தால், அது முறைகேடாகக் கருதப்படும்.

ஒன்றரை மணி நேரம் நடைபெறும் இந்தத் தேர்வில் 12 பக்கம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். தேர்வு எழுதி முடித்த பின்னர், விடைத்தாளை ஸ்கேன் செய்து சம்பந்தப்பட்ட பொறுப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், தேர்வு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளைத் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்துக்கு மேலும் 6 லட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகள்

**சென்னை, ஏப். 19:** தமிழகத்துக்கு மேலும் 6 லட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகள் செவ்வாய்க்கிழமை (ஏப். 20) வரவுள்ளன.

நாடு முழுவதும் கரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஜனவரி 16-ஆம் தேதி தொடங்கியது. தமிழகத்தைப் பொருத்தவரை, 5 ஆயிரம் மையங்களில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கோவேக்ஸின், கோவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி இதுவரை 48 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த 14-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை மூன்று நாள்கள் நடைபெற்ற தடுப்பூசி சிறப்பு செயல் திட்டத்தின் போது ஏறத்தாழ 5 லட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இந்த நிலையில் மாநிலத்தின் பயன்பாட்டுக்காக மேலும் 60 ஆயிரம் குப்பி தடுப்பு மருந்துகள் தமிழகம் வரவுள்ளன. ஒவ்வொரு குப்பியிலும் 10 டோஸ் வீதம் தடுப்பூசிகள் இருக்கும்.

இதுகுறித்து சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்துக்கு இதுவரை 55.8 லட்சம் டோஸ் கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசியை மத்திய அரசு அனுப்பியுள்ளது. அதில் 48.07 லட்சம் தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 8.8 லட்சம் கையிருப்பில் உள்ளன. இந்நிலையில், மேலும் 6 லட்சம் கோவிஷீல்ட் மருந்துகள் வரவுள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் மாநிலம் முழுவதும் 76,005 பேருக்கு கரோனா தடுப்பூசி திங்கள்கிழமை செலுத்தப்பட்டதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொண்டோரின் எண்ணிக்கை 48,07,148-ஆக அதிகரித்துள்ளது.